Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (11 - 12 - 1990) செவ்வாய்க்கிழமை ஓசை 286

## பொருள்கள் இறக்கமுடியாது; அரச அதிபருக்கு அறிவிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்தின் இறங்குதுறையான து தொன்னூறு வீதமான பகுதிகள் சேதமடைந்திருப்பதாலும், காலநிலைக்கு ஏற்ப கடல் கொந்தளிப்புக் காரணமாகவும் பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கமுடியாதிருப்பதாக யாழ். அரசாங்க அதிபருக்குத் தெரிவித்திருக்கின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதி வைத்தியசாலைகளுக்கான

# மனநோய் மருந்து விநியோகம் சுகாதார அமைச்சால் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள மனநோய் வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருள்களின் விநியோகத்தை சுகாதார அமைச்சு நிறுத்தியுள்ளது.

மனநோயாளருக்கு வழங்கப்படும் மருந்துப்பொருள்கள் தீர்ந்துவிட்டதனால் பிராந்திய சுகாதார நிலையம் பல தடவைகள் சுகாதார அமைச்சுக்கு இதுபற்றி அறிவித்தும் மருந்துப் பொருள்கள் இது வரை அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியில் உள்ள மன நோய் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளருக்கு நோய்உக்கிரமடைந்து வைத்தியர்கள், தாதியர்கள், காவலாளிகள் போன்றவர்களினால் மேற்படி நோயாளர்களைக் கட்டுப்படுத்த முடியாதநிலை உருவாகி உள்ளது; இதனால் மனநோயாளர்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேறி வீதிகளில் அலைந்து திரிவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தற்போது வைத்தியசாலைகளில் எஞ்சிஉள்ள நோயாளர்களுக்கு சிலமாற்று மருந்து வகைகளைப் பயன்படுத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனவரியாக இவ்வருடம் மூன்று மில்.ரூபா சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக மோட்டார் வாகன வரியிறுப்பாளர் இளைக்கு 1990ஆம் ஆண்டில் வரிஅறவீடுகளில் மூன்று மில்லியன் ரூபா சேர்ந்துள்ளதாக அந்தக்கிளை அதிகாரி ஒருவர் கூறினார்.

1990ஆம் ஆண்டில் இருந்து இந்த வரிஅறவீடுகள் ஆரம்பித்திருந்தன. இந்த அறவீட்டில் 1984ஆம் ஆண்டு தொடக்கம் வாகன வரி செலுத்தாதோர் 87ஆம் ஆண்டு வாகன வரியை மட்டும் செலுத்தினால் மீண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்குடா பாடசாலை அதிபர் ரெலோவால் சுட்டுக்கொலை

(கல்குடா)

கல்குடா மகாவித்தியாலய அதிபர் திரு. யோகநாதன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கடந்த வியாழனன்று நடந்த இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது: இவர் “பயங்கரவாதத்தை” தனது கடமைக்காக வீட்டிலிருந்து காலையில் புறப்பட்டுச் செல்லும் வழியில் ரெலோவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் மாலை நான்கு மணியளவில் அதே இடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

## நிலத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் ஒழித்துக்கட்டிவிட முடியாது

- மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ

(மன்னார்)

வடக்கு - கிழக்கில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பணி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது: “பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும். நிலத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் ‘பயங்கரவாதத்தை’ ஒழித்துக்கட்டிவிட முடியாது. மாறாக பயங்கரவாதிகளை தனிமைப்படுத்துவதன் மூலமே அதனைச் செய்ய முடியும்” என அண்மையில் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளரிடம் பேசிய மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சேருவாவில படையினர் இருவர் புலிகளின் தாக்குதலுக்குப் பலி!

(மூதூர்)

சேருவாவில இராணுவ முகாமிலிருந்து அரிப்பு நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதால் இருவர் அதே இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இதனை சிறிலங்கா பாதுகாப்பு அமைப்பும் உறுதி செய்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது நேற்றுக்காலை 7.30 மணியளவில்முகாமிலிருந்துவெளியேறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் ரெலோவால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

ரெலோவினராலும், இராணுவத்தினராலும்கைது செய்யப்பட்ட வாழைச் சேனையைச் சேர்ந்த சினித்தம்பி இராசேந்திரம் (32 வயது) சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தென் இலங்கையில் ஜே. வி. பி. தாக்குதல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

மீண்டும் ஜே. வி. பி. யினர் தாக்குதல்களை அதிகரித்துள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பிலிருந்து 150 மைல் தொலைவில் உள்ள மங்கள ஓயா என்னும் இடத்தில் மறைந்திருந்த ஜே. வி. பி. யினர் ஆயுதப்படையினரைத் தாக்கியுள்ளனர். ஆயுதப் படையினர் திருப்பித்தாக்கியதில் ஐந்து ஜே. வி. பி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புபட்டியுடன் பாராளுமன்றம் சென்றனர்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து பாராளுமன்றத்திற்குச்சென்றிருந்தனர். சர்வதேச மனித உரிமைகள் தின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பு தமிழர்தொடர்ந்தும்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (1988ஆம் ஆண்டுக்கானது) டிசம்பர் மாதம் நடத்தப்படும் என்றும் இதற்கான திகதியை நேரடியாகவும், பத்திரிகைகள் மூலமும் தெரிவிப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அநாதைகளான, விதவைகளான சகோதரருக்கு நாமே உதவவேண்டும்

- பரா

(அலுவலக நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் தமது சொந்த மண்ணிலேயே தென் தமிழீழத் தமிழ்மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். பெருந்தொகையானோர் அனாதைகளாகவும், விதவைகளாகவும், ஊனமுற்றோராகவும் அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கமோ, சர்வோதய இயக்கமோ அல்லது வேறெந்த பொது ஸ்தாபனங்களோ இதுவரை உதவ முன்வரவில்லை. அடிப்படை வசதிகளெதுவுமின்றி அடுத்த நேர உணவுக்கே அல்லல் படும் எம் சகோதரர்களுக்கு இயன்ற உதவிகளை வழங்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை கந்தர்மடம் சைவப்பிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அழைப்பு

(கொழும்பு)

நாட்டையும், நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்தையும் பாதுகாக்கமுன்வருமாறு முன்னாள்ஜனாதிபதிதிரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையில் உள்ள ஜனாதிபதி கல்வி நிலையம் மாணவ தலைவர்கள் தின நிகழ்ச்சியில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியம் பணமாகவழங்க இலங்கை வங்கி நடவடிக்கை

புகையிரதப் பகுதி ஓய்வூதியக்காரர்களுக்கு கடந்த ஆடி, ஆவணி மாதங்களுக்குரிய ஓய்வூதியத்தை பணமாக வழங்க இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவரும் தாம் வழமையாக ஓய்வூதியம் பெறும் இலங்கை வங்கி கிளைகளுக்குத் தத்தமது வவுச்சர்களுடன் வந்து ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## திரை நீக்கம்!

(தெல்லிப்பளை)

முன்னாள் யாழ். மாவட்டத்தளபதி லெப். கேணல் கிட்டு (பாலச்சந்திரன் - மல்லாகம் மதி (பாலச்சந்திரன் - மல்லாகன்)2 ஆவதுநினைவுதினத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் தடுத்துவைப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை தியாவெட்டவான் கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எட்டுப் பேரில் நால்வர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச்வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம் (50 வருடகால நம்பிக்கைச் சின்னம்ரதிவோச் வேக்ஸ்)-நிர்வாகம். (B.1648)

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

### போட்டோஸ்ரட்

'ஸ்கைலைன்ஸ்'

தரமான போட்டோஸ்ரட் ரோணியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள் 281 B. மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 'SKYILINES'281,B,Clock TowerRoad, Jaffna. (ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை) (B/1662)

### அன்ரன் ஆர்ட்ஸ்
### ANTAN ARTS

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பரப் பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், மல்கா பேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (/1684)

### தவறிவிட்டது

இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த ஆ. பாலகாந்தன் என்பவருடைய அடையாள அட்டையும், வங்கி அலுவலக அடையாள அட்டையும் மற்றும் முக்கிய ஆவணங்களும் மகேந்திரா(வைமன்)வீதிக்கும், பற்றிக்ஸ் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R-917)

### அலங்காரப் பொருள்கள் கண்காட்சி

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் சார்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பதினொரு மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில், நிலைய உறுப்பினர்களால் வாழை நாரில் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்களின் கண்காட்சி நடைபெற உள்ளதாக நிலையச் செயலாளர் திரு க. இராசேந்திரா அறியத் தருகின்றார். (24)

### தேவை

பிரபல சைவ, அசைவ உணவு வகைக் கடைகளில் பணியாற்றியோர் (சகல உணவுவகைகளும் தயாரிப்பு முறைகளும் தெரிந்தவர்கள்) உடனடியாகத்தொடர்பு கொள்ளவும்.

**ROOT** காரியாலயம்
முடமாவடிச் சந்தி,
திருநெல்வேலி.
(B. 1695)

### சிற்றூரவை உதவி

(கொழும்புத்துறை)

வடிகால்களில் சேறு அள்ளித் தடங்கல்களை அகற்றும் மாநகர சபைத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கென ஐந்து சோடிப் பாதணிகளை குருநகர் கிழக்கு கிராம சேவகர் பிரிவு சிற்றூரவை கொடுத்துஉதவியுள்ளது. இந்த அன்பளிப்பு, வேலைப் பகுதி மேற்பார்வையாளர் பி. அந்தோனிப்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டு 4 5ஆம் வட்டாரங்களில் சேறு அள்ளும் வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (24)

### நீர்த் தட்டுப்பாட்டை போக்க முயற்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர்த்தேவையைப்பூர்த்தி செய்யும் முகமாக புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சாட்டியில் காணி ஒன்றை கொள்வனவு செய்துள்ளது.

மேற்படி காணியில் கிணறு அமைப்பதன் மூலம் புங்குடுதீவுமக்களுக்குதட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகிக்க முடியும் என சங்கப் பொதுமுகாமையாளர்செ.செல்வவதனாதெரிவித்தார். (22)

பைப் உங்கள்

### கவிதைவரக் காணோம்

விழியிரண்டும் கூர்ந்து ஆவலுடன் நாளும்
காத்திருந்து பார்த்தேன் கவிதை வரக் காணோம்
நேற்றுக் கூட பார்த்தேன் ஏமாற்றம் தானே மிச்சம்
காயமுற்றவேளை கவிதை தந்த கவியே
காற்றுலர்த்தும் நீரோ உங்கள் கவியூற்று
இல்லை என்று கூறி எழுதிவிடும் நாளை
காத்திருப்பேன் மீண்டும் கவிதை வருமென்று
வேற்று நாடு சென்றோர் வேசம் போட்டு நின்றோர்
பார்த்து இங்கு நின்றோர் பார்வையாளர் போன்றோர்
தோலுரித்துக்காட்டி தொடுத்த கவிச் சரத்தை
அடுத்து ஒரு கவிதை வடித்து விடும் கவியே
நாளை காலை மலரும் என்ற சாரமதைக் கொண்டு.

— ரவி

க.பொ.த சாதாரணதரம்
O/L
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

## 90ஆம் நாள் இதய அஞ்சலி

அமரர்
**W.A. இராஜேந்திரா குட்டிமூப்பர்**

(பிரபல சமூக சேவையாளர், காரைநகர் 'மாலுமீன்' (சி. நோர்) நிறுவன ஸ்தாபகர், யாழ். புனிதவளன் விளையாட்டுக்கழக முக்கிய உறுப்பினர்)

செங்குருதி படிந்த மண் அங்கமென
கொண்ட எம் ஈழமண்ணை வழமுட்ட
'மாலுமீன்' நிறவனத்தைக் கட்டியெழுப்பியவன்
தான்புகுந்த வளநாட்டில் பலர்புகுந்து
கல்வியிலும், செல்வத்திலும்
வளம்கண்டு வாழ்வதற்கு
வழிசமைத்துக் கொடுத்தவன்!

நோர்வேயில் கடந்த 12-9-1990இல் இயற்கை எய்திய அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 12-12-90, புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியும், 5 மணிக்கு யாகப்பர் ஆலய மண்டபத்தில் அஞ்சலிக்கூட்டமும் நடைபெறும்.

உறவினர், நண்பர், அன்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
யாழ். புனிதவளன் விளையாட்டுக்கழகம்.

(B-1700)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசைக் கலைமணி / நாட்டியக் கலைமணி
டிப்ளோமா பயிற்சிநெறியினைப்
பயிலுவதற்கான அனுமதி 1990 / 1991

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

தகைமைகள்:-

(1) பரீட்சார்த்திகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒருபாடமாகச் சித்திபெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியத்தில் சித்திபெறாதவர்கள் வடஇலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும.

(2) பரீட்சார்த்தி 31. 01. 1991 அன்று 25 வயதுக்கு மேற்படாது இருத்தல்வேண்டும்.

விண்ணப்ப படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/-க்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலமோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 X 10 செ. மீ அளவினதான கடித மேலுறையுடன் தபால் மூலமோ, சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31 01, 1991 ஆகும்.

— பதிவாளர்
(B. 1697)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
## மருத்துவபீடம்

3ஆம் ஆண்டு மருத்துவபீட பரீட்சையும்,
2ஆம் ஆண்டு மருத்துவபீட பரீட்சையும்

மேற்கூறப்பட்ட பரீட்சைகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர். (B-1696)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### மகாபொல/உதவிப்
## பணக் கொடுப்பனவு
### (1ஆம், 2ஆம் கொடுப்பனவுகள்)

சிரேஷ்ட (2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள்) மாணவர்களுக்கான மேற்படி கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகள் கீழ் வருமாறு செய்யப்பட்டுள்ளன.

மகாபொல
கலைப்பிரிவு )
வர்த்தகப் பிரிவு ) 1990-12-12 - பி. ப. 2-00
நிர்வாகப் பிரிவு )

உதவிப் பணம்
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு )
பௌதிகவியற் பிரிவு ) 1990-12-12 - பி. ப. 2-00

மகாபொல
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு ) 1990-12-14 - பி. ப. 1-00
பௌதிகவியற் பிரிவு )

உதவிப் பணம்
வர்த்தகப் பிரிவு ) 1990-12-14 - பி. ப. 1-00
நிர்வாகப் பிரிவு )

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:-

1. மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை
3. உதவிப் பணப் பதிவேடு
4. தேசிய அடையாள அட்டை

(B/1701)

## சிந்தனைக்கு

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர்கள் காசுகள் தாரீர்!
அதுவுமற்றவர் வாய்ச் சொல்லருளீர்!
ஆண்மையாள ருழைப்பினை நல்கீர்.

— சுப்பிரமணிய பாரதியார்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## 'உணர்வுகளுடன் ஒன்றி இருப்பதைப் பகிர்வோம்!'

தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ அடக்குமுறை தமிழீழம் எங்கும் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இதில் பெருமளவு பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது தென் தமிழீழப் பகுதியாகும். அங்கு பல ஆயிரக் கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இலட்சக் கணக்கில் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

அங்குள்ள தமிழர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி பட்டினியுடன் காடுகளிலும், வயல்களிலும், மதவுகளின் கீழும் தம் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு நேர உணவு பெறுவது பெரும் வாழ்க்கைப் போராட்டமாக மாறிவிட்டது. நோய்க்கும், காயத்திற்கும் மருந்தின்றிக் குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை பலர் மரணித்துவிட்டார்கள்.

இதனை உலகமோ, சிறிலங்கா அரசாங்கமோ கண்டு கொண்டதாக இல்லை. அவர்களுக்கு உதவ எவரும் முன்வரவில்லை. உதவுவதாக கூறிக் கொள்ளும் ஸ்தாபனங்களும் வடக்குடன் முடங்கிக் கொண்டன. அதேவேளை வெளியில் இருந்து உதவுவதற்கு முன்வரும் சில தனியாரினதும் நிறுவனங்களினதும் உதவிகள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்தடைவதற்குப் பெரும் தடையாக சிறிலங்கா உள்ளதோடு, அவ்வாறு தமிழ்ப் பிரதேசங்களுக்கு எனப் பெறப்பட்ட உதவிகளை வேறு தேவைக்கும் பயன்படுத்தி வருகின்றது. பொதுவாகவே சிறிலங்கா அரசாங்கம் இயற்கை அழிவுகள், புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தித்திட்டங்கள் போன்றவற்றுக்குப் பெறும் பணத்தினை இராணுவத் தேவைக்கு பயன் படுத்துவதாக இன்று பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலையில், திட்டமிட்ட ரீதியில் இனப்படுகொலையை மேற்கொள்ளும் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து நாம் உதவியை எதிர்பார்த்தல் என்பது மடமையாகும். படுகொலைகள் மூலமும், பட்டினிச் சாவின் மூலமும் தமிழரின் உரிமைப் போராட்டத்தை அடக்கிவிடலாம் எனச் சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்த நிலையில்தான் தமிழருக்கென ஒரு சுதந்திர நாடு உலகில் இல்லாததின் தாக்கம் தெரியவருகின்றது. இலங்கையிலோ அன்றி உலகின் வேறு எங்கோ முஸ்லிம்களுக்கு இன்னல் நேர்ந்தால் குரல்கொடுப்பதற்கும், உதவி செய்வதற்கும் இஸ்லாமிய நாடுகள் பலவுள்ளன. அதேவேளை, உலகில் ஒருபகுதியில் மட்டும் இருக்கும் சிங்களவர் போன்றோருக்கு உதவ அவர்கள் நாடு என்ற ரீதியில் உள்ளனர். இதனால் அவர்களுக்கு இன்னல் ஏற்படும்போது அரசென்ற ரீதியில் உதவியைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

ஆனால், தமிழரைப் பொறுத்து உலகம் முழுதும் பரந்து வாழ்கின்றார்கள். கிழக்கே இறுதியான பீஜியில் இருந்து மேற்கே அமெரிக்காக் கண்டம்வரை தமிழர்பரந்து பட்டு வாழ்கின்றார்கள். இதில் இந்திய, இலங்கைத் தமிழர்கள் உள்ளடங்குவர் - ஆனால் தமிழர்கள் இன்னல் அனுபவிக்கும்போது உதவிக்கு ஓடிவர சுதந்திரமான நிலையில் எவரும் இல்லை. ஏன், அண்மையில் இருக்கும் தமிழ்நாட்டில் இருந்து கூட உதவிகள் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் அல்லலுறும் தென் தமிழீழ மக்களுக்கு உதவி செய்வது ஏனைய தமிழர்களது கடமையாகும். சிறிலங்கா இனவாத அரசால் தென் தமிழீழ மக்கள் மட்டும்தான் அல்லலுறுகின்றார்கள் என்பதில்லை. மொத்தமாக தமிழீழ மக்கள் அனைவருமே அல்லல் உறுகின்றார்கள்தான், ஆனால் தென்தமிழீழ மக்களுக்கு இழைத்ததுபோன்ற அடக்குமுறையினை வடக்கில் மக்கள் மீது புரிவதற்கு எதிரியால் முடியாதபடி அவன் கட்டுப் படுத்தப்பட்டுள்ளான்.

ஆனால், கிழக்கில் தமிழ் மக்கள் நடமாடமுடியாத நிலை. உணவோ, மருந்தோ, ஏனைய அத்தியாவசிய தேவைகள் எதையுமே தேடிச் செல்லமுடியாது ஒழிந்து வாழ வேண்டிய நிலை. இதனால் சாவின் விளிம்பில் தமிழ் மக்கள் தவிக்கின்றார்கள்.

இந்நிலையில், இயங்கக்கூடிய நிலையில் உள்ள பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் அனைவரும் நலிந்த நிலையில் உள்ள தமது சகோதரர்களைக் காக்க முன்வர வேண்டும். தென் தமிழீழ மக்களுக்கு உதவ மேற் கொள்ளப்படும் பணம், பொருள் சேகரிப்பு நடவடிக்கைக்கு தமது ஆதரவை மனமுவந்து நல்க வேண்டும்.

## 37

அன்பான வாசகர்களே!

36 நாட்களாக வெளிவந்த ''உதிக்கும் திசைநோக்கி உன்னதபயணம்'' கட்டுரைத் தொடரைப் படித்திருப்பீர்கள். கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலையை நேரில் தெரிந்துகொள்ள திரு. மாத்தயா அங்கு சென்றபோது அவருடன் கூடச்சென்ற நான் என்னால் முடிந்தவரை அந்த மக்களின் அவல நிலைகளை வெளிப்படுத்த முயன்றிருக்கிறேன். இந்தக் கட்டுரைத் தொடரின் மூலம் என்னால் வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தது பத்துவீதமே என நான் கருதுகிறேன். அந்த அவலங்களின் உண்மை வடிவத்தை முழுமையாக எழுத்தில் வடிக்க என்னால் முடியவில்லை. அந்தளவுக்கு எழுத்துத் துறையில் எனக்கு அனுபவமில்லை. இத்துறையைப் பொறுத்தவரை நான் ஒரு கற்றுக்குட்டிதான்.

உச்சக்கட்ட இன அழிப்பு, அவலங்கள் நிறைந்துள்ள அம்பாறை மாவட்டத்திற்கு எம்மால் போக முடியாததால் இக்கட்டுரை எந்தவிதத்திலும் முழுமையானதல்ல. அத்துடன் தொடராக இத்தனைநாள் வாசகர்களை ஒரே நிலையில் வைத்திருப்பதில் எந்தளவுக்கு வெற்றிகண்டுள்ளேன் என்பதும் தெரியவில்லை. என்னோடு கூடவந்த நிதர்சனம் படப்பிடிப்பாளர்கள் இவற்றை வீடியோ மூலம்படமாக்கியுள்ளார்கள். எனவே இவற்றை நேரில் காணும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கும்போது அங்குள்ள நிலைமையின் கோரத்தை, அவலத்தை இதைவிடக் கூடுதலாக உங்களால் தெரிந்து கொள்ளமுடியும் எனக் கருதுகிறேன்.

இக்கட்டுரைத் தொடரை ஆரம்பிக்கையில் அங்குள்ள கலாசாரங்கள், இயற்கை அமைப்பு, குடியேற்றங்கள் அனைத்தையும் வெளிக்கொணர வேண்டுமென்றுதான் நினைத்தேன். ஆனால் அவலங்களையே முழுமையாக என்னால் கொண்டுவர முடியவில்லை. அதைவிட கட்டைபறிச்சானில் ஒரு தாக்குதலில் 60 இராணுவக் கொமாண்டோக்கள் பலியான சம்பவம் போன்ற விடயங்களை எழுத முடியவில்லை. முடிந்தால் அவற்றையும் புத்தகவடிவில் தர முயற்சிக்கிறேன்.

நாங்கள் அங்கு சென்றபோது இருந்த நிலைமைகளை விட இப்போதைய நிலைமை இன்னும் மோசம். திருமலையிலிருந்து மட்டக்களப்பு சென்று திரும்ப முன்னர் நான்கு இராணுவ முகாம்கள் அங்கே கூடிவிட்டன. இப்போது மேலும் பல முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. 1010 சதுரமைல் உள்ள திருக்கோணமலை மாவட்டத்தில் தற்போது 108 சிறிலங்காப் படை முகாம்கள் உள்ளன.

அந்தளவுக்கு ஆக்கிரமிப்பின் வேகம் உச்சநிலையிலுள்ளது; இதைவிட சிங்கள, முஸ்லிம் ஊர்காவல் படைகளின் காவல் நிலைகள் வேறு. இத்தனைக்கும் மத்தியில் தான் அங்கு போராளிகள் போராடுகின்றார்கள். எஞ்சி இருக்கும் மக்கள் இவர்களுக்குக் கைகொடுக்கிறார்கள். குடியிருப்புக்களில் மக்கள் இல்லாத இடங்களில் போராளிகள் எதிர் நோக்கும் சிரமங்கள் எடுத்துரைக்க முடியாதவை எந்தத் தகவல்களுமோ போராளிகளுக்குக் கிடைக்க மாட்டா. சகலதையும் போராளிகளே செய்ய வேண்டும். ஆனாலும் தங்கள் மண்ணை மீட்டெடுக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்தின் அவலங்கள்தான் மிக அதிகம்- இன அழிவைக் கூடுதலாகச் சந்தித்த மாவட்டம் இதுவேதான். அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை இந்த மூன்று மாவட்டங்களிலும் படுகொலை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையை விட இந்தப் படுகொலைகள் எவ்வளவு காலத்துக்குள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை அவதானித்தால் தான் இன அழிப்பின் வேகம் புரியும். கை கொடுப்பார் என்று எதிர்பார்க்கப் பட்டோர் கழுத்தை நெரிக்கையில்...... வருத்தத்துடன், அதேவேளை தவிர்க்க முடியாமல் மேற்கொள்ளப்பட்ட சில முடிவுகளுக்கு காரணங்கள் புரிந்திருக்குமென நினைக்கிறேன்.

அகதி முகாம் படுகொலைகள், சுற்றி வளைப்புக்கள், பயணங்களின் போது கடத்தப் படுதல் என்று பல்வேறு வடிவங்களில் இவை மேற்கொள்ளப்படுகின்றன. வேதனைக்குரிய விடயம்.

என்னவென்றால் இந்த அவலங்களை மூடிமறைக்க, அவற்றை நியாயப்படுத்த சிறிலங்காவின் தேசியப் பத்திரிகைகள், அதிலும் குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைகள் எடுத்துவரும் பகீரதப் பிரயத்தனங்கள் தான் - வந்தாறுமூலை அகதிகள் முகாமிலிருந்து அகதிகள் வெளியேற்றம் இதற்கு சிறு உதாரணம்.

தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய தகவலைப் பெறுதல், நோயாளிகளை பராமரித்தல் காயமடைந்தோருக்கு வைத்திய வசதி, அகதிமுகாம் மக்களுக்கு உணவு, அவர்களுக்கான வைத்திய வசதி இவை போன்றவையெல்லாம் தங்களுடைய கடமைகள். இவற்றில் எவரும் தலையிடாதீர்கள்; தலையிட முடியாது என்றெல்லாம் இராணுவம் இல்லாத பகுதிகளில் முழக்கமிடும், (ஏன் சண்டித்தனம் என்று கூடச் சொல்லலாம்) செஞ்சிலுவைச் சங்கத்தினர் போன்றோர் கிழக்கு மாகாணத்தில் எந்தளவு ''பொறுப்புடன்'' கடமை புரிந்துள்ளனர் என்பதும் கேள்விக்குறியே; முடிந்தால் எனது அன்புக்குரிய வாசகர்கள் இந்த அமைப்புகள் தங்கள் பணி குறித்து அச்சிட்டு வைத்திருக்கும் பிரசுரங்களை வாங்கி கிழக்கின் இன்றைய நிலைமையையும் ஒப்பிட்டால் உண்மை விளங்கும். இந்த மூன்று மாவட்டங்களிலும் சுமார் ஐயாயிரம் பேர் டிசம்பர்-10 (தற்போதைய நிலவரப்படி) வரையில் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆயிரக் கணக்கானோர் கைதாகியுள்ளனர். தடுப்புக்காவலில் இருப்போர் பற்றி அறிகிறார்களோ இல்லையோ, இவர்கள் கண்ணெதிரே கைது செய்யப்படுவதே அவசியமாகிறது இவர்களுக்கு.

அடுத்து ''கோட்டையைக் கைப்பற்றுவதில் மட்டக்களப்பு ஆயுதங்களின் பங்களிப்பு கணிசமானது. அதைவிட மட்டக்களப்பு போராளிகளும் அங்கு போராடியிருக்கிறார்கள். வீரமரணமடைந்திருக்கின்றார்கள்'' என்று திரு. நியூட்டன் கூறிய வார்த்தைகள் அவதானிக்கப்படவேண்டியவை, இன்று வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மக்களைப் பாதுகாப்பதில் கிழக்கு மாகாண மக்களின் பங்களிப்பை இந்த வார்த்தைகள் உணர வைக்கும், பதிலுக்கு நாம் அவர்களுக்காக என்ன செய்துள்ளோம்: வெட்கப்பட வேண்டிய விடயம். இந்தப் போரினால் எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள்தான். பாலுக்குச் சீனி இல்லையென்ற பிள்ளைக்கும் கூழுக்கு உப்பு இல்லையென்ற பிள்ளைக்கும் ஒரேயளவு கவலைதான் என்பார்கள். கூழே இல்லாத பிள்ளைகளுக்கு...?

இந்தக் கட்டுரைத் தொடரைப் படித்த எவருக்காவது கிழக்கு மாகாண மக்களுக்கு உதவ வேண்டும். அந்த அவலங்களுக்கு முடிவுகட்ட வேண்டும் என்று சிந்தனை பிறந்திருக்குமாயின் இத்தொடரை எழுதிய நோக்கம் வெற்றி பெற்றதென்றே கருத வேண்டும். அன்பான வாசகர்களே! எங்கள் பார்வைகளை அகலமாக்கிக் கொள்வோம். அவர்களை நோக்கி எங்கள் கரங்கள் நீளட்டும். உதிக்கும் திசையிலுள்ளோர் உயிர் பெறட்டும். நீங்கள் சம்மதம் தானே? நன்றி.

— கரும்பறவை
(முற்றும்)




## 250 கூரைத் தகடுகள் அன்பளிப்பு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமிற்கு மேலதிகமாக ஒரு கொட்டகையை அமைப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் 250 கூரைத் தகடுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த அகதிகளுக்காக ஏற்கனவே மூன்று கொட்டகைகளும் 10 மலசல கூடங்களும் வேறு அமைப்புக்களாலும் துர்க்காபுரம் தேவஸ்தானத்தினராலும் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை உள்நாட்டுப்போரை முடிக்க

# பொது நலவாய நாடுகள் அமைப்பு முக்கியமான பங்காற்ற வேண்டும்

(கன்பரா)

'இலங்கையில் ஏழு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர பொதுநலவாய நாடுகள் அமைப்பு முக்கியமான பங்களிக்க வேண்டும்' என்று அவுஸ்திரேலிய செனற் வெளியுறவுத்துறை நிழல் அமைச்சரான றோபேட் ஹில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் இலங்கையில் நடைபெறும் துன்பகரமான நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டு மௌனியாக இருக்கக்கூடாது. பொதுநலவாய அமைப்பு இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய வாய்ப்பான அந்தஸ்தில் உள்ளது. பொதுநலவாயம் ஏதாவது ஒரு பயன் பொருத்தமான நடவடிக்கையை உடன் மேற்கொள்ளாவிடில் முன்னைய ஆண்டிடி 30,000 தமிழ் மக்கள் இறந்தொழிந்ததை விட அதிக அகாலமரணமடையும்

மானோர் இறந்துமடியலாம். இருதரப்பினரும் தீர்வொன்றுக்கு ஆயுதபலத்தையே நம்பியுள்ளனர் மூன்றாமவர் தலையீடு இன்றிபேச்சு வார்த்தை இடம்பெறப் போவதில்லை. இவ்வாறு றோபேட் ஹில் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உதவுவதற்கென பொதுநலவாய நாடுகளின் உயர்குழுவொன்றை நிறுவ அவுஸ்திரேலிய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் என்றார்.

## லொறியில் வந்தவரிடம் வவுனியாவில் பணம் பறிப்பு

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கிவந்த லொறி ஒன்று வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அந்த லொறியில் வந்த ஒருவரிடமிருந்து 15 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் இராணுவத்தினர் பறித்தெடுத்துள்ளனராம்.

பணம் பறிக்கும் நோக்கத்துடனேயே இந்த லொறி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாம்.

லொறியைத் தடுத்துவைத்த இராணுவத்தினர் பொருள்களையேற்றி வந்தவரைத் தாக்கி, அவரிடமிருந்த 15 ஆயிரம் ரூபாவைப் பறித்து எடுத்துவிட்டு மேற்படி கடை உரிமையாளரை வவுனியாவுக்கு அழைத்து வரும்படி கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளனராம்.

லொறி பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உணவுப் பொருள்களுடன் வவுனியாவில் விடப்பட்டுள்ளது. (49)

## கோவா ஆளும் கட்சியில் பிளவு; முதலமைச்சர் இராஜினாமா!

(பனஜி)

கோவா முதலமைச்சர் டாக்டர் லூயி பர் போசா பதவி விலகியுள்ளார்.

இவர் தனது பதவி விலகல் கடிதத்தை நேற்றுக் காலை கோவா ஆளுநரிடம் சமர்ப்பித்தார். மகாராஷ்டிரா வாதி கோமந்தக்கட்சியின் ஒரு பிரிவினர் இந்திரா காங்கிரஸுடன் சேர்ந்ததாலேயே இவர் பதவி விலக நேரிட்டதாகக் கூறப்படுகிறது.

கோவா மக்கள் கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகியனவும் மகராஷ்டிரா வாதி கோமந்தக் கட்சியின் ஒரு பிரிவினரும் சேர்ந்து காங்கிரஸ் ஜனநாயக முன்னணி ஒன்றைநிறுவியுள்ளனர்.

மேலும் இந்தக் கூட்டணிக் கட்சித் தலைவர் பதவிக்குக் கோவா இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்ட மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் இந்தக்கூட்டணி நேற்று மதியம் ஆளுநரைச் சந்தித்து அரசாங்கம் அமைப்பது குறித்துப் பேசியதாகவும் கூறப்படுகிறது.

## வலேசா வெற்றி

(வார்சோ)

போலந்தில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் முதன்முறையாக நடத்தப்பட்ட சுதந்திரமான ஜனாதிபதித் தேர்தலில் லேக் வலேசா 75 வீதத்திற்குமதிகமான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளார். 1975 ஆம் ஆண்டு முதல் 'சொலிடாரிட்டி' தொழிற்சங்கத்தை ஸ்தாபித்து கம்யூனிசபோலந்தில்சீர்திருத்தங்களுக்காக பலமாகமுழங்கி வந்த லேக்வலேசா பெரும் வெற்றியைப் பெற்றுள்ளார்.

## 'ஒளிவிழா'

(கோப்பாய்)

பலாலி ஆசிரியர் கலாசாலை கத்தோலிக்க மன்றத்தினரால் நாளை புதன் கிழமை 'ஒளிவிழா' நடாத்தப்பட உள்ளது. காலை 9.30 மணிக்கு கோப்பாய் கலாசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கும் இவ்விழாவில் சவேரியார் குருமட அதிபர் திரு. எஸ். ஜே. இம்மானுவேல் அடிகள் உரை நிகழ்த்துவார். (க)

## கடற்றொழிலாளருக்கு உடனடி நிவாரணம் வழங்கும் திட்டம்

(குருநகர்)

கடலில் அகால மரணமடையும் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாவை நிவாரணமாக வழங்கும் புதிய திட்டத்தை இம்மாதம் 1 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில்குருநகர்கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் அமுல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த மாதம் 30 ஆம் திகதி கடலில்வைத்து சிறிலங்கா கடற்படை சூட்டில் பலியான இருவருக்கும், அதே சம்பவத்தில் படுகாயம் அடைந்து இம்மாதம் 5 ஆம் திகதி மரணமான மரியதாஸ் குடும்பத்திற்கும் தலா இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டதாக சங்கத்தின் முகாமையாளர் திரு. டேமியன் சூரி நமது ஈழநாதம் நிருபருக்குத் தெரிவித்தார். (21)

## தமிழ்நாட்டில் காங்கிரஸ் மறியல்

(சென்னை)

தமிழகத்தில் மலிவு விலை மதுக்கடைகளை எதிர்த்தும், சட்டம், ஒழுங்கு சீர்கெட்டிருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவும் காங்கிரஸ் (ஐ) கட்சியினர் நேற்று மாநிலமெங்கும் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மறியலில் ஈடுபட்டனர்.

மலிவுவிலை மதுக்கடைகளை எதிர்த்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டோரை விடுவிக்கக்கோரியும், மாநிலமெங்கும் ஒருமைப்பாட்டைக் குலைக்க விடுதலைப்புலிகள் முயற்சிக்கின்றனர் என்றும் அதை முறியடிக்கவேண்டுமெனக்கோரியும் இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது. இவற்றை வற்புறுத்தும் வகையில் நேற்று ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர்.

## ஓட்டை போடும் வேளை ஓடிவிட்ட மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மின்சாரம் விரும்பியநேரத்தில் நிற்பதும் விரும்பிய நேரத்தில் வருவதுமாக இருப்பதால் பல்வேறு வார்ட்டுகளில் பல்வேறு பிரச்சினைகளை உண்டுபண்ணுகின்றது.

மூன்று தினங்களுக்கு முன்னர் பல் வைத்தியப் பிரிவில் ஓர் இளைஞருக்குப் பல்லில் ஓட்டை போடும் வேலை நடைபெற்றுக்கொண்டு இருந்தது வைத்தியர் ஓட்டை போடும் இயந்திரத்தால் ஓட்டைபோட்டுக்கொண்டிருந்தார். திடீரென மின்சாரம் காலைவாரிவிட்டது. இதனால் மேசையில் இருந்த உபகரணங்களால் அந்த இளைஞரின் பல்லுக்கு ஓட்டை போடும் வேலை பூர்த்தியானது.

## ஆசிரியர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச்சங்க, யாழ். மாவட்ட சங்க, கிளைச் சங்க நிர்வாகிகளின் அவசரக் கூட்டம் இன்று (11 - 12 - 90) மாலை 2 மணிக்கு நல்லூரில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறுமென மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்திற்கு சகல நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

## கையொப்பம் செயலகத்தில் சேவை செஞ்சிலுவையில்

(யாழ்ப்பாணம்)

''எங்கு செய்தாலும் மக்கள் சேவையேசெய்கிறேன்'' என்று சக உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி கூறும் ஒரு செயலக நிர்வாக உத்தியோகத்தர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்திலசேவையாற்றிவருகிறார்.

இவர் காலையில் யாழ். செயலகத்துக்கு வருகைதந்து தமது வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டு சிறிது நேரம்கூடத் தங்காது செயலகத்தைவிட்டு வெளியேறி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தை நோக்கிப் பயணமாகிவிடுகிறார். (லோ)

பொருள்கள்

கடந்த 5.12.90ஆம் திகதி அன்று இடம்பெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்தில் கப்பலிலிருந்து பொருள்களை இறக்குவதில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி ஆராயப்பட்டது. அதன் பின்னர் இந்த இறக்க முடியாத சூழ்நிலையை யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

தென். இலங்கையில்

யினர் கொல்லப்பட்டிருப்பதோடு பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேருவாவில

வந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

ரி-81 ரக எல். எம். ஜி 1, அதன் மகசீன் 3, ரி-56 ரக (பட்மொடல்) துப்பாக்கி 1, மகசீன் 3, ஐ. எம் ரவைகள் 315 என்பனவே கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும்.

மனநோய்

அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஈ)

வாகனவரியாக

டும் பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ளலாம் என சலுகை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பெருந்தொகையான வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களுக்கான வரிகளைச் செலுத்தியுள்ளனர் எனவும் அவர் கூறினார். (லோ)

## திருட்டால் வீதித்தடை

(தெல்லிப்பளை)

வலி வடக்கில் தொடரும் திருட்டு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இரண்டு பிரதான வீதிகள் மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

இதன்படி தெல்லிப்பளை-மாவிட்டபுரம் வீதியும் தெல்லிப்பளை-கட்டுவன் வீதியுமே இவ்வாறு பொதுமக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளன. (ச)

நிலத்தை

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ அக்குழுவினரிடம் பேசுகையில், அரசியல் தீர்வு ஒன்றே இறுதியாக இருக்க முடியும் என்றாலும் அது அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டியதாகும் என்றார். அந்தத் தீர்வு குறித்து நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தைப் பொறுத்ததாகும். இராணுவத்தினரான எங்களைப் பொறுத்த வரையில் இராணுவ ரீதியாகப் போராடுவதில்தான் நாட்டம் இருக்க முடியும் என்றும்அவர் மேலும் குறிப்பிட்டார்.

குடும்பஸ்தர்

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது இரண்டுபிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த டிசம்பர் முதற் தேதி கைது செய்யப்பட்டவராவர். கடந்த நாலாந்திகதி வாழைச்சேனையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நிர்வாக

ஆனால் இதுவரை இந்தத் திகதி பற்றி கடிதம் மூலமாகவோ அல்லது பத்திரிகைகள் வாயிலாகவோ அறிவிக்கவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படவில்லைஎன்றும்தெரிவித்தனர்

இதேநேரம் இந்தப் பரீட்சைக்கென செயலகத்தில் கட்டப்படும் 100 ரூபா பணம் திருப்பிப் பெற முடியாது என்றும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

போக்குவரத்து சீரில்லாத நிலையில் பரீட்சைத் திணைக்களம் பரீட்சை நடக்கும் திகதியை முன்னரே அறிவித்திருந்தாலே தாம் கொழும்புக்கு செல்ல முடியும் என்றும் அந்த விண்ணப்பதாரிகள் தெரிவித்தனர்.

இதேநேரம் சென்ற மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் 1990 ஆம் ஆண்டிற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போதும் இந்த மாதிரியான நடைமுறைகளே அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் தமிழர்கள் நிர்வாக சேவையில் இருந்து ஒதுக்கப்பட்டு வருகின்றனர். மேலும் 1989 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இதே போட்டிப் பரீட்சையின்போதும் ஒரு தமிழ் மாணவர்கள் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கறுப்புப்பட்டியுடன்

மான நேற்று இலங்கையில் இடம்பெறும மனித உரிமைகள் மீறல், சித்திரவதை, படுகொலைகள் என்பவற்றைக் கண்டித்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஜனநாயகத்தை

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில், ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தைப் பாதுகாக்க அனைவரும் ஓரணியில் திரளவேண்டும் என்று கோரினார்.

வன்செயல்களில் ஈடுபடவோ, ஊக்கமளிக்கவோ வேண்டாமெனவும் எதிர்கால சந்ததியினரைக் கேட்டுக் கொண்டார். நாட்டின் அரசியல் வரலாற்றைச் சுட்டிக் காட்டிய அவர், கெப்பிட்டிப் பொல, வீரபுரன்அப்பு, துங்கிரிபண்டா போன்றோரை நினைவுகூர்ந்தார்.

நால்வர்

ன்றன. இவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட கரைச்சி தியாவெட்டவானைச் சேர்ந்த விஜயரட்ணம்(5 பிள்ளைகளின் தந்தை) ந. மகேஸ்வரன் (26 வயது) (2பிள்ளைகளின் தந்தை) இளையதம்பி(35 வயது 5 பிள்ளைகளின் தந்தை) தங்கராசா (40 வயது ஐந்து பிள்ளைகளின் தந்தை) ஆகியோரே சிறிலங்கா இராணுவத்தால் தடுத்துவைக்கப்பட்டிருப்பவராவர்.

லெப். மதி

முன்னிட்டு நேற்றுக் காலை 9 மணியளவில் தெல்லிப்பளைச் சந்தியில் 6 அடி உயரமான அவரது உருவப்படம் உறவினர் ஒருவரால் திரைநீக்கம்செய்துவைக்கப்பட்டது

அநாதைகளான

காசவித்தியாசாலையில் தென்தமிழீழ மக்களுக்கு உதவுதல் தொடர்பான கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர் பரா தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்: பதவியாவிலிருந்து திருக்கோணமலை, அம்பாறை பொத்துவில், மட்டக்களப்பு அடங்கிய பிரதேசமே தென் தமிழீழமாகும். மொத்த தமிழரில் மூன்றிலொரு பங்கினர் இப்பகுதியில் வாழ்கிறார்கள். இவர்களில் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் வேறு மாவட்டங்களில் அகதிகளாக வாழ்கின்றனர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் தாய் தந்தையரை இழந்து அனாதைகளாகியுள்ளனர். இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் விதவைகளாகியுள்ளனர். இவர்களுக்கு நாமே உதவ வேண்டும். அது எமது முக்கிய கடமையுமாகும் என்றும் குறிப்பிட்டார். (மு)

இப்பத்திரிக்கை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.